**தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கை தகவல்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான மொத்தம் 249,843 ஹெக்டெயர் காணி 1992 ஆம் ஆண்டில் 23 உள்ளூர் தோட்டக் கம்பனிகளுக்கு 53 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டு அந்த 10 கம்பனிகளால் அரசாங்கத்திற்குப் பெறப்பட வேண்டிய ரூபா 587,146,771 குத்தகை வாடகை வருமானம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்ததால், நி.பி. 176(2) இன் பிரகாரம் திறைசேரியுடன் சேர்ந்து வருமான நிலுவைத் தொகையை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எட்டு பெருந்தோட்டக் கம்பனிகள் 2023.12.31 இல் உள்ளவாறு 2024.04.30 அளவில் குத்தகை வாடகை நிலுவைகளை முழுமையாகச் செலுத்தியுள்ளன, கொட்டகலை பெருந்தோட்ட கம்பனி 2 தவணைகளை செலுத்தியிருந்ததுடன் குருநாகல் தோட்டக் கம்பனியும் குத்தகை வாடகை நிலுவையில் இருந்து நான்கில் ஒரு பகுதியை செலுத்தியுள்ளது. 2024.04.30 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவை ரூபா 642,476,963 ஆகும். கொட்டகலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் குருநாகல் பெருந்தோட்ட கம்பனி ஆகிய இரு கம்பனிகளும் செலுத்த வேண்டிய குத்தகை வாடகை நிலுவை காரணமாக குத்தகை வாடகை நிலுவைகள் அதிகரித்துள்ளன. | குத்தகை வாடகை நிலுவை மற்றும் வருடாந்த குத்தகை வாடகை வருமானத்தை நிர்ணயித்தவாறு அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1995 நவம்பர் 27 இல் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் செய்துகொண்ட 1558 ஆம் இலக்க திருத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட குத்தகை வாடகையானது 53 ஆண்டுகளுக்கு ஒரு வருடத்தின் நான்கு சம தவணைகளில் செலுத்தப்பட | குருநாகல் பெருந்தோட்ட கம்பனி அவர்கள் பின்பற்றும் முறையின் கீழ் தொடர்ச்சியாக வாடகையை செலுத்தியுள்ளது. எனினும், கம்பனிக்கும் தங்கத்தின் உரிமையாளரின் கணிப்பீட்டு முறைக்கும் இடையேயான பெறுமதிகளில் உள்ள வேறுபாடு காரணமாக, கம்பனியின் குத்தகை வாடகை நிலுவைகள் அதிகரித்துள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குத்தகை உடன்படிக்கையின் ஏனைய |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். தேறிய சொத்துக்கள் குறைவடைவதால் கம்பனி செலுத்த வேண்டிய வருடாந்த குத்தகை வாடகையின் குறைவான கொடுப்பனவு காரணமாக ரூபா 326,507,724 தொகை குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டும், மேலும் ரூபா 168,290,244 தொகை 05 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. குத்தகை வாடகை திருத்த உடன்படிக்கையின் 2(அ) மற்றும் 5(இ) பந்திகளின் பிரகாரம் குத்தகை வாடகையை செலுத்த தவறியமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியானது 100% அரசாங்கத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனியாக இருப்பதால், நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | விதிமுறைகளை சரிபார்த்து மறுபரிசீலனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்புக்கொள்ளப்பட்ட குத்தகை வாடகையை செலுத்தத் தவறியமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிய பிஈ/பிஎல்/ஆர்பி/பொது/2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பெருந்தோட்டக் கம்பனிகள் அரசாங்க காணிகளை காலாண்டு அடிப்படையில் உப குத்தகைக்கு விடுவதன் மூலம் ஈட்டும் வாடகை வருமானத்தில் 20 சதவீதத்தை திரட்டிய நிதியத்திற்கு அறவிடுவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 39,068,269 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 19,145,371 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்ததால், மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள மொத்த உப-குத்தகை வாடகை ரூபா 19,922,898 ஆகும். 2023 ஆம் ஆண்டிற்காக 10 பெருந்தோட்டக் கம்பனிகளிடம் இருந்து எவ்வித உப குத்தகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள உப குத்தகை வாடகையை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெருந்தோட்டக் கம்பனிகள் அரசாங்க காணிகளை உப குத்தகைக்கு விடுவதன் மூலம் ஈட்டும் வாடகை வருமானத்தில் 20 சதவீத கட்டணத்தை காலாண்டு அடிப்படையில் திரட்டிய நிதியத்திற்கு செலுத்துவதற்கான முறையான நடவடிக்கை தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட 04 செலவின விடயங்களின் ஏற்பாடுகள் 33 சதவீதத்திலிருந்து 305 சதவீதம் வரை குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நி.பி.66 மூலம் மாற்றப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது 135-1-1-0-1003 மற்றும் 135-1-1-0-1101 இற்கு போதுமான நிதியேற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாததால், நி.பி.66 இன் கீழ் அந்த இரண்டு செலவின விடயங்களுக்காக ரூபா 3.8 மில்லியன் நிதியேற்பாடு மாற்றப்பட்டுள்ளதுடன் 135-2-3-11-2202 செலவின விடயத்திற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் மேலும் ரூபா 410.32 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 1 மில்லியன் தொகை 135-2-4-21-1509 நி.பி..66 மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட ஒரு நிதியேற்பாடாகும். | வருடாந்த மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட பணியில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 2,500,000 தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 21 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 292,500,000 தேறிய நிதியேற்பாட்டில் 29 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சிலான ரூபா 127,014,153 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 நவம்பர் முதல் பெருந்தோட்டம், விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நோக்கெல்லையை திருத்தியமைத்ததாலும், பாதீட்டு சுற்றறிக்கை 01/2023 இன் பிரகாரம் அரசாங்க செலவினங்களை முகாமை செய்ததாலும் அமைச்சரின் செலவினங்கள் எழாத காரணத்தினால் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளன. | வருடாந்த மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட பணியில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 05 மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,900,000 மொத்த தேறிய நிதியேற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 07 மூலதனச் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா | பாதீட்டு சுற்றறிக்கை 01/2023 இன் பிரகாரம் பொதுச் செலவினங்களை முகாமை செய்தல் மற்றும் அலுவலகத் தேவைகளை கொள்வனவு செய்வதை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக மூலதனச் செலவின விடயங்களில் உள்ள நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளன. | வருடாந்த மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட பணியில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | 4,074,120,000 தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சிலான ரூபா 2,751,915,094 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | | செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்கான ரூபா 2,000,000 தொகையான நிதியேற்பாட்டிலிருந்து நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்ட தொகையில் ரூபா 1,568,080 கூட்டுமொத்தம் உரிய பணிகளில் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தது. | ஏனெனில் எதிர்வுகூறப்பட்ட நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருக்காதால் செலவினங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. | வருடாந்த மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட பணியில் நி.பி. 66 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் சோதனைக்குப் பின்னர் 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கிமீ தூரம் ஓடிய பின்னர் அல்லது இயந்திரத்தின் பெரிய மாற்றத்திற்குப் பின்னர் எது முதலில் நிகழ்கிறதோ அதன் பின்னர் எரிபொருளை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய போதிலும் அமைச்சால் பயன்படுத்தப்படும் 55 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் எரிபொருள் நுகர்வுக்காக சரிபார்க்கப்பட வேண்டும். |

**3.2 பணிகள் நிறைவேற்றப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு தெங்கு முக்கோணத்தில் தென்னை மரக்கன்றுகளை விநியோகிக்கும் செயற்திட்டத்துக்கான காணியை தெரிவு செய்தல், தென்னை மரக்கன்றுகளை விநியோகம் செய்தல், தென்னை நாற்றுக்கள் நடுதல் என்பனவற்றுக்கு ரூபா 9.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு முழுத் தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் காணி தெரிவுசெய்தலிற்கான பௌதீக முன்னேற்றம் 44 சதவீதமாகும். அதேபோன்று தென்னை மரங்களின் நடவு முன்னேற்றம் 67 சதவீதமாக உள்ளது. | 2023 ஆம் ஆண்டில் இலக்காகக் கொண்ட 700,480 தென்னை மரக்கன்றுகளை ரூபா 9.5 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு செல்வது உண்மையில் சாத்தியமற்றதாகும். அந்த தொகையின் கீழ் சுமார் 173,000 செடிகளை கொண்டு செல்ல முடியும். எனினும், அந்த விசேட செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதில், மரக்கன்றுகள் தவறுதலாக இலக்காகக் குறிப்பிடப்பட்டு, வடக்கு தென்னை முக்கோணத்தில் 2023 ஆம் ஆண்டில் நடப்படும் மொத்த மரக்கன்றுகள்தான் இலக்காகும். செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 100% ஆக இருந்த போதிலும் பௌதீக முன்னேற்றம் 67% ஆக உள்ளது. | செயற்திட்டங்களில் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கான யதார்த்தமான மற்றும் சரியான இலக்குகளை உள்ளடக்கி அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெலிகம தென்னை இலை வாடல் நோய் முகாமைத்துவத்தின் கீழ் பாதிக்கப்பட்ட தென்னை மரக்கன்றுகளை இனங்கண்டு தெரிவுசெய்யப்பட்ட மரக்கன்றுகளிற்கு ஊசி போடுதல் நடவடிக்கைகளில் பௌதீக முன்னேற்றம் முறையே 47 சதவீதம் மற்றும் 60 சதவீதம் ஆகும். | பாதிக்கப்பட்ட மரங்கள் அம்பாந்தோட்டை மற்றும் காலி பிராந்திய அலுவலகங்களால் குறிக்கப்பட்டுள்ளன. எனினும் மாத்தறை பிராந்திய அலுவலகப் பகுதியில் 319 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளதால் 16 உத்தியோகத்தர்களை நியமித்து இந்தப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மரங்கள் 2023 திசெம்பர் மாதத்தில் மாத்தறை பிராந்திய அலுவலகத்தில் குறிக்கப்படவில்லை. மேலும் குறிக்கப்பட்ட நோயுற்ற மரங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் தடுப்பூசி போட முடியாத மரங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆணடில் தடுப்பூசி போட விடப்பட்டது. அதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டின் கடைசி 5 ½ மாதங்களில் 20 கள | பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் நேரத்தை முகாமை செய்வதன் மூலம் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் இப்பணியை மேற்கொண்டும், குறிக்கப்பட்ட மரங்களுக்கு தடுப்பூசி போடும் இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 36,116 28 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட முடியவில்லை. | இந்த உத்தியோகத்தரின் ரூபா 36,116 கடன் மீதியை பதிவழிப்பு செய்வதற்கு திறைசேரியிலிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிப்பதற்கு தாமதமின்றி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 14 முதல் 26 ஆண்டுகள் வரை இடைநிறுத்தப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட ரூபா 398,511 கூட்டுமொத்தமான கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரிற்கு சொந்தமான சொத்தில் இருந்து ரூபா 255,997 தொகையை ஈடு செய்வதற்கு சட்ட ஆலோசனைகள் கிடைத்துள்ள போதிலும், காணியின் உரிமைத்துவம் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளதால், அதனை விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளராக மாற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் ரூபா 30,760 கடன் மீதியை பதிவழிப்பு செய்வதற்கு திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பேறப்பட வேண்டிய ரூபா 111,754 மீதிக்காக உரிய உத்தியோகத்தரிற்கு எதிராக சட்டமா அதிபர் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிடுவதற்கு சாத்தியமான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டும். மேலும் முறையான அங்கீகாரத்தின் பேரில் அறவிடமுடியாத நீண்டகால கடனை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ரூபா 5,221,961 கூட்டுமொத்தமான நட்டங்களிற்காக 01 முதல் 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அமைச்சினால் முடியவில்லை. | 3 சந்தர்ப்பங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, மீதமுள்ள வழக்குகள் தொடர்பான நட்டத்தை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் அறவிடமுடியாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய முழு விசாரணையை நடாத்தி அது பதிவழிப்பு செய்யப்பட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 833 ஆகவும், உண்மையான பதவியணியினர் 772 ஆகவும் இருந்ததால், 61 வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2022.07.22 இல் இராஜாங்க அமைச்சுக்கள் நீக்கப்பட்டதுடன் அந்த இராஜாங்க அமைச்சுக்களின் பதவியணியினர் சம்பந்தப்பட்ட அமைச்சரவை அமைச்சின் பதவியணியினராகக் கருதப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சு தெரிவித்திருந்ததுடன், அதன் பிரகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கான பதவியணியினர் 2023.03.31 ஆம் திகதிய டிஎம்எஸ்/சீஎம்/17 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புமாறு பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களை சரியாக கண்டறிந்து, அத்தியாவசிய பணிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |